<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 16/2025**</u>

<u>**வழக்கு சாட்சி PW-5**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | செல்லத்துரை | தொழில் | : | ஜே.சி.பி வைத்து தொழில் |
| கிராமம் | : | கம்பனேரி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 6th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் கம்பனேரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜே.சி.பி வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி ரவி என்னுடைய அண்ணன். 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என்னுடைய அண்ணன் மகன் ராஜேஷிற்கும், எதிரிக்கும் சண்டை நடந்தது. சாயங்காலம் மீண்டும் சண்டை நடந்துள்ளது. என்னுடைய அண்ணன் ரவி மற்றும் அவருடைய சகோதரர் ராஜேஷ் ஆகியோரை எதிரி கத்தியால் குத்தியதாக என்னுடைய அண்ணன் எனக்கு தகவல் சொன்னார். நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன். இரண்டு பேரையும் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்து போலீசார் விசாரித்தார்கள். அப்போது, என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார்

வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.06 19:43:49 +0530